செ.வெ.எண்: 358 நாள்: 14.06.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவி இடங்களுக்கான இட ஒதுக்கீட்டு பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் வார்டு உறுப்பினர் பதவி இடங்களுக்கான இட ஒதுக்கீட்டு பட்டியலை மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.06.2019) வெளியிட்டார். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 497 கிராம ஊராட்சிகளில் மொத்தம் 3,807 வார்டுகள் உள்ளன. இந்த 3,807 ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களில் பழங்குடியினர், ஆதிதிராவிடர் மற்றும் பெண்களுக்காக மொத்தம் 2,264 வார்டுகள் இட ஒதுக்கீடு செய்து, புதுக்கோட்டை மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இப்பட்டியல் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சம்மந்தப்பட்ட அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மாலதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) கிருஷ்ணமூர்த்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பாலமுரளி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**